Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

அருளிய

திரு அருட்பா

11378
R65(வள்)

ட்டையூர்

தேனப்ப பழனியப்ப தேனப்பன்

1992

Koviloor Digital Library

4-4
Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திரு. அருட்பிரகாச வள்ளல் பெருமான்
சிதம்பரம் ராமலிங்க ஸ்வாமிகள் அருளிய

திரு. அகவலின் சில பாடல்களுக்கும்,
மஹாமந்திரத்திற்கும் காப்புச்செய்யுளுக்கும்
ஜோதி பாடலுக்கும்

மறைபொருள் விளக்கம்

வடலூர் முத்துராமலிங்கம்

கோவிலூர் ஆண்டவர்
A. No. 11378
R65(வள்)

கோட்டையூர்
தேனப்ப பழநியப்ப தேனப்பன்
1992

Koviloor Digital Library

பதிப்புரை

வடலூர் சிதம்பரம் ராமலிங்க ஸ்வாமிகள் அருளிய பல பாடல்களில் 'திரு அகவல்' உயிர் நாடியாகும். அதில் வரும் பல பாடல் வரிகளுக்கு சிறந்த சன்மார்க்கிகளுக்குக் கூட இன்னும் உண்மைப் பொருள் விளங்கவில்லை. இந்தப் பதிப்பில் அகவலின் 32 பாடல்களை எடுத்துக் கொண்டு, கடந்த 40 ஆண்டுகளாக, ஆராய்ந்து அவற்றையே நினைந்து நினைந்து உருகி, திருவருள் வலத்தால், இந்த முப்பத்திரண்டு பாடல்களுக்கும் மறைபொருளை வடலூர் முத்துராமலிங்க ஐயா அவர்கள் உணர்ந்து நமக்குத் தந்திருக்கிறார்கள். இத்துடன் மஹாமந்திர விளக்கமும், ஜோதிப்பாடல் விளக்கமும், காப்புச் செய்யுள் விளக்கமும் தந்திருக்கிறார்கள். இதை சன்மார்க்க அன்பர்கள் ஊன்றிப் படித்து, உணர்ந்து, அசேதனமாகிய இந்த உடலை, சேதனப் பொருளாக மாற்றி, மரணமில்லாப் பெரு வாழ்வில் வாழ்ந்திட அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருள்வாராக.

கோட்டையூர் தேனப்ப பழநியப்பதேனப்பன்.

Koviloor Digital Library 4-4

காப்புச் செய்யுள்

வள்ளல் பெருமான் திருவாசகத்தில் உள்ள 'திரு அண்டப்பகுதி'யை ஓதி ஓதி இன்புற்றிருக்கிறார். அதில் உள்ள செய்திகளை அவருடைய வாழ்க்கையில் மேற்கொண்டு பயிற்சியும் பெற்றிருக்கிறார். இதன் விளைவு தான் அவர் பெற்றிருக்கும் பெருவாழ்வு. 'திரு அகவல்' அவர் பெற்ற பெருவாழ்வின் வரலாறாகும்.

திரு. அகவல் 1596 அடிகளை உடையது. அதற்குக் காப்புச் செய்யுள் பெருமான் பல ஆண்டுகளுக்கு முன்னரே அருளியிருக்கிறார். அதுவும் இருவரிகளை உடையது தான்.

''அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருள் பெரும் சீர்சொல திகழ்வ சித்தியே''
இது தான் அந்தக் காப்புச் செய்யுள்

திருச்சிற்றம்பலம் என்கின்ற நம் உச்சியில் விளங்கும் பொற் கோவில் தான் அருட்சபை. அதில் நின்று ஐந்தொழில் நடம் புரிபவரே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். அவருடைய பெருமைகளை உள்ளும் புறமும் ஒத்து தெளிவாக ஓதினுல் போதும், எல்லா வகையான அற்புதங்களையும் செய்யும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளலாம். இது தான் காப்புச் செய்யுளின் பொருளாகும்.

அருட்பெருஞ்ஜோதி

திரு. அகவலில் மொத்தம் 1596 வரிகளையும் இரண்டால் வகுத்தால் 798 துறைகள்—பாடல்கள் வருகின்றன. அவற்றுள் முதல் பாடலும் கடைசி பாடலும் அருட்பெருஞ்ஜோதியை நான்கு நான்கு முறை திருப்பிச் சொல்வதாய் அமைந்திருக்கின்றன.

இவ்வாறு நான்குமுறை அருட்பெருஞ்ஜோதியை திரும்ப திரும்ப சொல்வதின் நோக்கம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அத்துடன் இரண்டு பாடல்களுக்கும் தனித்தனியே பொருள் உண்டு என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். முதல் பாடலின் பொருளை வள்ளல்

Koviloor Digital Library

பெருமான் 'ஏறுஜோதி' என்கிறார். இதனை நித்திய ஜோதி தரிசனம் என்ற பாடலில் காணலாம். முதல் பாடல் நட்சத்திர ஒளி சந்திரஒளி சூரியஒளி நெருப்பின் (அக்னி) ஒளி என்ற நான்கையும் படிப்படியாக உயருகின்ற(ஏறு கின்ற) ஒளியை குறிப்பன. இவற்றுள் நெருப்பு மட்டுமே மற்ற மூன்று ஒளிகளாக மாறுகின்றது என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். கண் ஒளியும், நட்சத்திர ஒளியும் சேர்ந்து வெள்ளொலியால் வெளியில் உள்ள பொருள்களைப் பார்ப்ப தற்கு பயன்படுகின்றன. அப்படியே மன ஒளியும், சந்திர ஒளியும் உருவமுடைய பொருட்களை இனம் கண்டு கொள்ள உதவுகின்றன. உயிரின் உணர்வு ஒளியும் சூரிய ஒளியும் சேர்த்து பொருள்களின் தன்மையை உணர்ந்து கொள்ள உதவுகின்றன. அறிவாகிய இறை ஒளியும் நெருப்பொளியும் சேர்ந்து பொருள்களின் பயன்களை நாம் அடைய உதவு கின்றன. எனவே ஏறுஜோதியில் நாலு அருட்பெருஞ் ஜோதியும் உருவம், இனம், தன்மை, பயன் என்ற நான் கையும் வளரும் ஒளியால் ஏறு ஜோதியால் அறிவிக்கின்றன. ஆனால் 798வது பாடலில் இந்த வரிசை மாறுகிறது. வளர்ந்த ஜோதியை (ஒளி உடம்புக்குரிய அடிப்படை உண்மையை) மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற வீறு ஜோதியைக் குறிக்கிறது. இந்த நான்கும் முறையே பயன், தன்மை, இனம், உருவம் என்ற வரிசையில் அமைகின்றன. இந்த நான்கையும் இன்னும் தெளிவாக விளக்கிக் கொள்ள வேண்டுமானால், உலக அனுபவம், உயிர் அனுபவம், அருள் அனுபவம், இறை அனுபவம் தரும் ஜோதிகளாகக் கொள்ளவேண்டும். ஓரளவேனும் இறை அனுபவம் பெறாத யாரும் ஏறுஜோதியையும் வீறு ஜோதியையும் போதுமான அளவு பெற்று இன்புற முடியாது. 798வது பாடலாகிய வீறு ஜோதிப் பாடலை அடுத்து வள்ளல் பெருமானுக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வழங்கியிருக்கும் மகா மந்திரத்தை சேர்க்க வேண்டும். அதுவும் இரண்டு அடிகளை உடைய செந்துறைப் பாடல் தான்.

Koviloor Digital Library

மஹாமந்த்ரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

இந்த மகாமந்திரத்தில் மூன்று அருட்பெருஞ்ஜோதியும், ஒரு தனிப்பெருங்கருணையும் இருக்கின்றன. இவற்றில் உள்ள எழுத்துக்களை எண்ணிப்பார்த்தால் மொத்தம் 33 எழுத்துக்கள் இருக்கின்றன. மனித மொழியில் இருக்கும் ஒலி வடிவ எழுத்துக்கள் (PHOLENES) 33 தான் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். நாம் நிமிர்ந்து நிற்பதற்கும், நடப்பதற்கும், பேசுவதற்கும் உதவி செய்வது முள்ளெலும்பு களுடன் கூடிய முதுகுத்தண்டு. இந்த முள்ளெலும்புகளின் மொத்த எண்ணிக்கை33, இவற்றுள் 33-வது எலும்பின் மேல் ஒருகுழி இருக்கிறது அதில்மூளைக்கும் முள்ளெலும்புகளுக்கும் வேண்டியதொடர்பைத் தந்து இயங்கச்செய்கிறநீர் (அமுதம்) (CERIBRO SPINALFLUID) இருக்கிறது. இந்த நீரின் மேலே எந்த ஆதாரமும் இல்லாமல் நிராதாரமாக ஒளி ஒன்று சுடர்விட்டுக் கொண்டு இருக்கிறது. அந்த ஒளிதான் அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரின் அடிநிலையாகும். அதன் முடி நிலை தான் திருச்சிற்றம்பலத்தில் நடம்புரியும் அருட்பெருஞ் ஜோதி. இதையே அருட்சபை என்றும், தெருள் பெரும்சீர் (தெளிவு தருகிற சிறப்பு)உடையது என்றும் காப்புச் செய்யுள் தெரிவிக்கிறது. மகாமந்திரத்தில் உள்ள மெய்யெழுத்துக்களை நீக்கிவிட்டுபார்த்தால் 25 எழுத்துக்கள் இருக்கின்றன. அவை

Koviloor Digital Library

25 அனுபவங்களை குறிக்கின்றன. அவை ஜீவ துயில், கனவு நனவு, துரியம், துரியாதீதம் என்பன முதல் 5 அனுபவங்கள் மரதுயில், கனவு, நனவு, துரியம், துரியாதீதம் என்பன அடுத்த 5 அனுபவங்கள் நிர்மல துயில் முதலிய ஐந்தும் 3வது 5 அனுபவங்கள் இவற்றுள் முதல் 5 அனுபவங்களையும், உலக அனுபவத்தோடு சேர்த்துக் கொள்ளவேண்டும். அடுத்த பர, நிர்மல அனுபவங்கள் 10யும் உயிர்அனுபவமாக கொள்ளவேண்டும். 4வது குருதுயில் முதலிய 5-ம் அருள் அனுபவத்தோடுதொடர் புடையன. 5 வது சிவ துயில் முதலிய 5அனுபவங்களும் இறை அனுபவம் ஆகும். இவற்றுள் 25 வது ஆகிய சுத்தசிவ துரியா தீத அனுபவம் கிடைத்த உடனே முதல் மூன்றுவகைகளில் முதலில் உள்ள 9 அனுபவங்களும் மறைந்துவிடும். இதைத் தான் ‘‘ நவந்தவிர் நிலைகளும் நண்ணு ஓர் நிலையாய் அவந்தவிர் சிற்சபை அருட் பெருஞ்ஜோதி’’ என்கிறது திருஅகவல். 25 ல் 9 கழித்த பிறகு மீதி உள்ள 16ம், பெருவாழ்வுக்குரிய அனுபவங்களாகும். இதையே ‘‘பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க’ எனச் சான்றோர் வாழ்த்திலி ருந்து நாம் புரிந்து கொள்கிறோம். இதனையும் திரு அகவல் ‘‘ ஈரெண் நிலையென இயம்புமேல் நிலையில் பூரணசுக மாய் பொருந்து மெய்ப்பொருளே என்கிறது. இதன் விளக் கத்தை அபியக்தர் என்ற பேரறிஞர் ஏழு வெண்பாவாகப் பாடியிருக்கிருர். அது சிவஞானபாயத்தில் காணலாம்.

‘‘ விரும்பும் அருட் பொருளை வீழ்த்து மயங்கல்
இரந்த அநிலனீ திரும்பல்—வருந்து அறிவு
தோன்றலுடன், ஐயம், விழுந்த இடம் கண்டெடுத்தல்
ஆன்ற நனவில் ஐந்தாம்’’

இந்தப் பாடலில் நனவில் நடந்த ஐந்துவித அனுபங்கள் தெரிகின்றன. ஒருவர் ஒரு அரிய பொருளை போன இடத்தில் விட்டு விட்டு வந்து விடுகிறார். திரும்பியதும்,

Koviloor Digital Library

பொருளைக் காணோம் எனமயங்குகிறார். போன இடத்தில் விட்டு விட்டோமோ, எனஐயப்படுகிறார். பிறகு அறிவின் துணையால் உறுதிப்படுத்திக் கொள்கிறார். போன இடத்திற்குப் பொருளைத்தேடிப் போய் கிடைக்கப்பெறுகிறார். அந்த அரியபொருள் மீண்டும் கிடைத்ததும் மகிழ்வின் எல்லைக்கே போய்விடுகிறார். இதேபோல் துயில், கனவு, துரியம், துரியாதீத்திலும் அனுபவங்கள் ஏற்படும். பக்குவப் பட்ட ஆன்மாக்களே துரியம், துரியாதீத அனுபவங்களை உணர முடியும்.

இந்த நிலைகளை வள்ளல்பெருமான் மிக எளிமையாக நம்மவர்களுக்கு விளங்கும்படி சொல்லியிருக்கிறார். அதை ஓதி உணர்ந்து, பிற சன்மார்க்கிகளுடன் ஸத் சங்கம் செய்து அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு பெருவாழ்வு வாழநாம் முயல வேண்டும். அதற்கு அன்பு, தயவு, கருணை தான் நாம் கைக் கொள்ளவேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

—*—

Koviloor Digital Library

ஜோதிப்பாடல்

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
வாம ஜோதி சோம ஜோதி வான ஜோதி ஞான ஜோதி
ஆதி நீதி வேதனே
சூரிய சந்திரன் அக்னி என்ற மூன்றும்

உலகத்தில் உள்ள பொதுநிலை முச்சுடர் ஆகும். சுயமான மாரூத நிலை. வாமம் — வலம் — வடகலை
சோமம் — இடம் — இடகலை

சூரியனை வலப்பக்க ஆற்றலாகவும், சந்திரனை (மனமாகவும்) இடப்பக்க ஆற்றலாகவும் குறிப்பிடுவது. இந்த இரண்டின் அடிப்படையாகிய நெருப்பை புறத்தேதோன்றும் வான ஜோதியாகவும், அகத்தே தோன்றும் ஞானஜோதியாகவும் இறைவன் அருள் அறத்தால் மாற்றி அமைக்கின்றான். இவ்வாறு அருள் (ஆதி நீதி - அருள் அறம்) அறத்தால் நம்மை வேதித்து உயர்த்துகின்றனேவ வேதியனாகிய அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் (அருள் அற வேதியர்). அவர் உலகில் புறத்தே தோன்றுகிற சூரியன் சந்திரன் நெருப்பு என்கின்ற மூன்றையும் சூரிய கலையாகவும், சந்திர கலையாகவும், அக்னி கலையாகவும், இயக்குகின்றார். அப்படி இயக்குவதற்கு உயிர்ப் பணியால் ஏற்படுகிற ஜோதியே அடிப்படையாகிறது. அந்த இரண்டையும் அக்னிமயமாக்கும் பொழுது வான ஜோதியாகவும், ஞானஜோதியாகவும் அவை தோன்றுகின்றன.

ஜோதி ஜோதி, ஜோதி பரம்மாக ஜோதி
யோக ஜோதி, வாதஜோதி, நாத ஜோதி,
ஆடல் நீடு பாதனே

Koviloor Digital Library

உடம்பாகிய சூரியனையும், மனமாகிய சந்திரனையும் அடிப்படையாகக் கொண்டு உயிராகிய அக்னி உயர்நிலை (பரநிலை)யை அடைகிறது. அப்படி உயர்ந்த உயிர் (மாகயோதி போக ஜோதி) மிகப்பெரிய இந்த உடம்பின் விரிவை மனதின் விரிவாய் காண்பது தான் யோகம். அவ்வாறு காணும் பொழுது மூச்சும் பேச்சும் (வாத-நாதம்) உயர்ந்த ஜோதியாக உருவாகின்றன. இத்தகைய மாற்றத்தை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடைய தொடர்ந்து நடைபெறுகின்ற திருவருள் நடனமே (காரணம்) இயக்கும் சக்தியாக அமைகிறது. அது உயிரை பண்படுத்துகிற, பதப்படுத்துகிற, அறிவும், அனுபவம் ஆக விளங்குகிற பாதங்கள் (திருவடிகள்) ஆகின்றன. இவ்வாறு தூலமாகவும், உருவமாகவும் நமக்கு கிடைக்கிற உலக அனுபவம் (முதல் அடியில்) சூட்சுமமாகிய உயிர் அனுபவமாக அரு உருவ அனுபவமாக மாறுகிறது. முன்குறித்த உலக அனுபவத்திற்கு இந்திரிய ஒழுக்கம் அடிப்படை. இரண்டாவது அடியில் உள்ள உயிர் அனுபவத்திற்கு கரண ஒழுக்கம் அடிப்படையாகிறது.

ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஏமஜோதி வியோம ஜோதி யேறுஜோதி வீறுஜோதி
வாதி ஞான போதனே

செயல் நினைவு அறிவு என்ற மூன்றிலும் ஏற்படுகின்ற கருமம், மயக்கம் ஆணவம் என்ற மலங்கள் அருளால் மாறுகின்றன. எப்படி? ஏமஜோதி-தங்கம்- இன்பம் - பாதுகாப்பு பாதுகாப்பும், இன்பமும் தருகிற ஏமஜோதியாக மாறுகிறது. சுத்த தேகமாக மாறுகிறது. வியோமஜோதி என்பது- பிரணவதேகமாக மாறுவதைக் குறிக்கிறது. முடிவில் அக்கினியின் புறவொளியாகிய ஏறுஜோதி உருவாகிறது. அகஒளியில் வீறு ஜோதியாக உருவாகிறது. வீறு ஜோதி என்ருல் பகுத்து மற்ற உயிர்களுக்கு வழங்குவதை குறிக்கிறது இந்தப் பணியைத்தான் அருள் ரசவாதத்தால் ஞான

Koviloor Digital Library

மயமாக்கும் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் வழங்குகின்ருர். இதுதான் வாத ஞானபோதனே என்பது. இவர் போதனே என்பது மும்மலத்தையும் மாற்றி ஆணவத்தை அடியோடு ஒழிப்பதைக் குறிக்கிறது. இதனால் அஞ்ஞான போதம் அகன்று ஞானபோதம் உருவாகிறது.

ஜோதி ஜோதி ஜோதி சிவம்
ஏகஜோதி யேகஜோதி யேகஜோதி யேகஜோதி
வாழ்க வாழ்க நாதனே.

கரும மலம் மாயாமலம் ஆணவ மலம் மூன்றும் முறையே சுத்த பிரணவ ஞான தேகமாக மாற்றுவதே தயாவண்ணமா கிற சிவம் ஆகும். இந்தக் கடவுள் அனுபவம் உருவான உடனே ஜோதியுட்ஜோதியாக பார்க்கும் இறைவன் உருவம் பாரோடு விண்ணுய பரந்த ஒரே ஜோதி ஆகிறது. விஸ்வ ரூப தரிசனமாக தெரிகிறது. இதை வழங்கிய இறைவன் திருவடிகளாகிய தெய்வ அறிவும், தெய்வ அனுபவமும் நம்மில் நிலைத்து வாழ்க. வாழ்க. இறைவன் நம்மைவிட்டு எப்போதும் பிரியாத நாதனுக மாறுவதால் நமக்குமரண மில்லாபெருவாழ்வை வழங்குக.

ஜோதிபாடல் வழங்கி வரும் விதம்வேறு. மேலே இதைப் பிரித்துப் பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. வழிபாடு முடிக் கும் பொழுது மேலே சொல்லி வந்தபடி பாடி முடிக்கலாம். சன்மார்க்க அன்பர்கள் உண்மைப்பொருளைத் தெரிந்து கொள்ள இது பெரிதும் உதவும் என நம்புகிறோம்.

அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி.

—✻— —✻—

Koviloor Digital Library

திரு அகவல்

257· புறநடுவொடு கடை புணர்ப்பித்து ஒரு முதல்
அறமுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

புறம்-நினைவு நடு-மனம் கடை-நினைக்கும் உளத்தோடு உடம்பும் சேர்ந்து, உடம்பு இயங்கும்படி செய்கிற (முதல்) உயிர் அறநெறியில் நிற்கும்படி இறைவன் வகுத்து அருளு கிறான். (அறமுற-நெறியில் நடக்கும்படியாக) மனம் புருவ மத்தியில்-உயிர் உள்ளம்-(உள்மனம்) உச்சியில்-இறை ஆனால் மனம் வழி, உடல் செயல்பட்டால் நெறி தவறும்.

உயிரை நெறிப்படுத்துவது எப்படி?

நினைக்கும் மனத்தோடு உடம்பும் ஒன்று சேர்ந்து இயங் கும்படி செய்வதுதான் உயிரை நெறிப்படுத்தும்முறையாகும். இதை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் செய்கிறார். சிந்தனை மயமாக உயிர் இயங்கும் பொழுது உணர்வு ஒதுங்கி நிற்கும்.

258. புறந்தலை நடுவொடு புணர்ப்பித்து ஒரு கடை
அறம்பெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறந்தலை — நினைக்கின்ற உயிர்
நடுவொடு — மனத்தோடு

சேரும்படி செய்து ஒரு கடை - உடம்பு அறநெறியில் நிற்கும்படி இறைவன் வகுத்தருள்கின்றான்.

நினைக்கின்ற உயிர் உள்ளத்தால் நினைக்கிறது. மனத்தால் அல்ல. இறையருளால் உள்ளம் இயங்கிஉயிரைச் சிந்திக்கச்செய்கிறது.

Koviloor Digital Library

உடம்பை நெறிப்படுத்துவது எப்படி?

சிந்திக்கும் உயிரை மனத்தோடு சேர்ந்து இயங்கும்படி செய்வதுதான் உடம்பை நெறிப்படுத்தும் முறையாகும். உணர்வு மயமாக உயிர் இயங்கும்பொழுது சிந்தனை விலகி நிற்கும். உயிரை நெறிப்படுத்த அறமுற என்றும் உடம்பை நெறிப்படுத்த அறம்பெற என வருவது ஏன்?

உயிருக்கு தானே சிந்திக்கும் திறமை உண்டு. அதனல் உற என்பது பொருந்தும்படி சிந்தித்தல் என்ற பொருளைத் தர வருகிறது. உடம்புக்கு சிந்திக்கும் திறமை இல்லை. அத்திறமையை உயிர்தான் அதற்குத்தருகிறது. தருவதைப் பெற்றுக்கொள்வது உடம்பு. அதனால் அறம் பெற என வந்தது.

கருவுருவம் புறம் — நினைவு
அருவம் அகம் — அறிவு
அருவுருவம் அகப்புறம் — உணர்வு
உருவம் புறப்புறம் — அனுபவம் சிறுமூளை அசைவு
புறஅகம் — மனம் உள்நோக்கி நினைப்பது
அகஅகம் — சிறிதும் முனைப்பு இல்லாத
இன்னுயிர் — அறிவு உள்நோக்கி அறிவது
அறிவால் அறிதல் — சிவமாதல்
உயிர்மூளை—உயிர்ப்புமூளை - அனிச்சைசெயல்
செய்வது முகுளம் —

259. அகப்புற நடுக்கடை அணேவால் புறமுதல்
அகப்பட வகுத்த அருட்பெருஞ்ஜோதி

அகப்புற — உணர்தல் உணரும் மனத்தோடு
நடுக்கடை — உடம்பை சேர்த்து
அணேவால் — சேருவதன் மூலம்
புறமுதல் — நினைக்கிற உயிர்
அகப்பட — அறிவுபெறும்படி
வகுத்த அருட்பெருஞ்ஜோதி.

Koviloor Digital Library

நினைக்கிற உயிர் அறிவுபெறுவது எப்படி?

உணர்கின்ற மனத்தின் வழி உடம்பு இயங்கும்படி செய்வது நினைக்கின்ற உயிரை அறிவு பெறச் செய்கிற முறையாகும்.

மனமும், உடம்பும் அணைவது உணர்வின் அடிப்படையில் தான் அமைகிறது. அந்தச்சமயம் நினைக்கின்ற உயிர் சிறப்பான அறிவை அடைய நேருகிறது. உணர்வும் நினைவும் சேர்ந்து உயிர் இயங்கும்பொழுதுதான் அனுபவம்உருவாகிறது. இந்த அனுபவத்தை எந்தக் குறையும் இல்லாமல் நிறைவு செய்வதுதான் இறைவு நுகர்வாகின்ற இறை அனுபவம்.

நினைவு + உணர்வு + அனுபவம் = அறிவு

குறள். ''அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தந்நோய் போல் தோற்றாக் கடை''

பிற உயிரின் துன்பம் தன் துன்பம்
போல் நினைத்து அதை நீக்குவதற்கு
பயன்படுவதே அறிவு

"READING MAKES A FULL MAN
WRITTING MAKES AN EXACT MAN
CONFERENCE (TALK) MAKES A READY MAN"

— FRANCIS BAKEN

படிப்பு நிரப்புகிறது. எழுத்து திருத்துகிறது. பேச்சு தயாராக்குகிறது

260, அகப்புற நடுமுதல் அணைவால் புறக்கடை
அகப்பட அமைத்த அருட்பெருஞ்ஜோதி

அகப்புற — உணர்வு
நடுமுதல் — நினைக்கின்ற உயிர் அணைவால்
புறக்கடை— நினைக்கின்ற உடம்பு

Koviloor Digital Library

அகப்பட — அறிவுபெறும்படி
அமைத்த அருட்பெருஞ்ஜோதி

நினைக்கின்ற உடம்பு அறிவைப் பெறுவது எப்படி?

உணர்வு மயமான மனமும் உயிரும் ஒன்றையொன்று தழுவிக் கொள்வதால் நினைக்கின்ற உடம்பு அறிவு மய மாகிறது.

ஔவையார் பாடல் :

''மாசற்ற கொள்கை மனதில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு''

உடம்பு நினைப்பதோ அறிவதோ இதுவரையில் மற்ற ஞானிகள் சொல்லவில்லை. 'வள்ளலார் மனதையும் நினைப்பது அறிவது என்று சொல்வது ஒரு நிலையில் தவறு என்றும், உடம்பும், மனமும் ஜடப்பொருள் என்றும், ஜீவ காருண்ய ஒழுக்கத்தில் சொல்கிறார் (1867). 5 ஆண்டு சென்ற பிறகு உருவானது திரு அகவல். அதில் உயிரைப் போல உடம்பும் மனமும் கூட உணரவும், நினைக்கவும் அறியவும் கூடும் என்கிறார். பாடல் வரி 257 முதல் 272 வரை. உடம்பும் மனமும் உணர்ந்தும் நினைந்தும் அறியவும் தவறினால் துண்டுபட்டு விழுந்து விடும். உயிரோடு சேர்ந்து வாழ இயலாது. ஆகவே உடம்பும் மனமும் சேதனப் பொருளாக (உணர்வு நினைவு அறிவுடன் கூடாது) மாறுவது தான் மரணமில்லாப் பெருவாழ்வை பெறுவதாகும்.

261. கருதக நடுவொடு கடை அணைந்து அகமுதல்
அருளுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
கருதக — மதிக்கத்தக்க அறிவோடு கூடிய
நடுவொடு — மனத்தோடு
கடை — உடம்பு
அணைந்து

Koviloor Digital Library

அக — அறி(வு)கிற
முதல் — உயிர்
அருள்உற — அருள்நெறியில் நடக்கும்படியாக அமைத்த அருட்பெருஞ்ஜோதி.
அருள்உற — சான்றோர்களாகிய அருளாளர்கள் ஸத் ஸங்கத்தால்
அறவோர் — அறிவோர் — அருளாளர்
நீதிவழியில் நடப்போர் — அறிவர் — உயிர்ப்பணி முற்றும் அறிவோர் — செய்வோர் (அந்தணர்)

எண்ணத்தக்க மனதோடு உடம்பைச் சேர்த்து இயங்கச் செய்கிறபொழுது

262 தனி அகநடுவொடு தலை அணைந்து அகக்கடை
அணியுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

தணி — அடக்குகின்ற, தணிக்கின்ற
அக — அறிவுள்ள
நடுவொடு — மனத்தோடு
தலை — உயிர்
அணைந்து
அகக்கடை — அறிவுடம்பு
அணிஉற — அழகுபெற
வகுத்த அருட்பெருஞ்ஜோதி

வழிகாட்டுகின்ற அறிவோடு கூடிய மனம் உயிரோடு சேர்ந்தால் அறிகின்ற உடம்பு அழகு பெறுகின்றது. உள்ளும் புறமும் ஒத்த நிலையை தோற்றத்தை அடைகிறது.

ஒப்பற்ற முறையில் அறிகின்ற மனதோடு உயிர் இணைந்து இயங்குகிறபொழுது அறிகின்ற உடம்பு பேரழகு வண்ணமாக எங்கும்பரவ நேருகிறது. எங்கும் இயங்குகிறது. (OMNI PRESENCE)

Koviloor Digital Library

263 அகநடு புறக்கடை அணைந்து அகப்பறமுதல்
அகமுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

அகநடு — அறிவு மனம் (அறிகின்ற மனம்)
புறக்கடை — நினைக்கும் உடம் (பு) போடு
அணைந்து — சேருகிறது—இதனால்
அகப்புற — உணர்வுடன் கூடிய
முதல் — உயிர்
அகமுற — அகம் — உற — அறிவுபெற
வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அறிகின்ற மனம் நினைக்கின்ற

உடம்போடு சேருகிறது. இதனால் உணருகின்ற உயிர் அருளறிவோடு எங்கும்பரவ நேருகிறது. (TELEPATHY)

264. அகநடு புறத்தலை அணைந்து அகப்புறக்கடை
அகலிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி

அகநடு — அறிவு மனம் (அறிகின்ற மனம்)
புறத்தலை — நினைக்கின்ற உயிருடன்
அணைந்து — சேருகிறது. அதனால்
அகப்புறக்கடை — மெய் உணர்வுடன் கூடிய உடம்பு
அகல் இடை — உலகு எங்கும்
வகுத்த — அருட்பெருஞ்ஜோதி

இங்கும் அறிவும் அனுபவமும் ஒரு விட்டமாகிறது. உணர்வும் நினைவும் ஒரு விட்டமாகிறது. இரண்டும் சேர்ந்து தூக்கம், கனவு, நனவு, துரியம், ஒரு வட்டத்தை நான்காக வெட்டு கின்றன. இதனால் எங்கும் பரவும் ஆற்றலும் தொடர்ந்து இன்புறும் ஆற்றலும் (துரியாதீதம்) உருவாகின்றன. உடம்புக்கும் உயிருக்கும் மையமாக இருப்பது மனம். இது பல பிறவிகளில் அனுபவித்த அனுபவங்களின் படிகமாக(Crystal) வளர்கின்றது.

Koviloor Digital Library

குறள் :- ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

வேந்து - இறைமாட்சி (Sovereignty)

திருத்தக்கதேவர் :– உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தண்திறை வையகம் காக்குமால்
ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயனின்றே
ஒருவர் மெய்யுணர்வு எய்தாக்கடை.

அறிகின்ற மனத்தோடு நினைக்கின்ற உயிர் சேருகிறது. அதனால் உணர்கின்ற உடம்பு பரந்த உலகு எங்கும் செயல் படும்படி வகுத்த ஆண்டவனே வந்தனம். (Omni Pot ent)

265. அகநடு அதனுல் அகப்புற நடுவை
அகமற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

அக	அறிவுடன் கூடிய
நடு	மன(ம்)த்தால்
அதனால்	
அகப்புற	உணர்வுடன் கூட
நடுவை	மனத்தின்
அகம்	அகந்தையை
அற	போக்கும்படி
வகுத்த	
அருட்பெருஞ்ஜோதி	

அகந்தை நீக்குதலை தீக்ஷை எனப்படும். இதற்கு அடுத்த படி நன்மை, தீமை இரண்டையும் பாவித்து உண்மையை உணர்த்தத் தொடங்கும். இது இருவினை ஒப்பு. சத்தினி பாதம். இருமனத்தில் அறிகின்ற மனமே சிறப்புடையது.

சான்றோர்களுடைய அறிவு — உணர்வு

Koviloor Digital Library

மயமான மற்றவர் அகந்தையை அகற்றுகிறது.

அறிகின்ற மனம், உணர்வுமயமான மனத்திலிருந்து ஆணவம் நீங்கும்படி செய்கிறது.

266. அகப்புறநடுவால் அணிபுற நடுவை
அகப்பட அமைத்த அருட்பெருஞ்ஜோதி

அகப்புற — உணர்வுடன் கூடிய
நடுவால் — மனத்தால்
அணி — அழகை மட்டுமே உணரமுடியும்

புறநடுவை — நினைக்கின்ற மனத்தோடு கூடிய (நினைவுடன்கூடிய மனம்) பொழுது

அகப்பட — அறிவுடன் விளங்க
அமைத்த
அருட்பெருஞ்ஜோதி

உணர்வுள்ள மனம் உடையவர்கள் நன்கு சிந்திக்கிற மனதை உருவாக்குகிற பொழுது உண்மை அறிவு தோன்றுகிறது.

உணருகின்ற மனம் அழகாக நினைக்கிற மனதை அறிவு பெறச்செய்கிறது. அதனால் அந்த மனம் ஒருநிலையில் நிற்கவும் நேருகிறது.

267. புறநடு அதனால் புறப்புற நடுவை
அறமுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

புற — நினைவு
சிந்திக்கின்ற மனம்
நடு — மனம்
அதனால் — சிந்திக்கிற தன்மையால்
புறப்புற — அனுபவ
அனுபவிக்கவிரும்பும் மனத்தை

Koviloor Digital Library

நடுவை	மன
அறம்	
உற	நெறிப்படுத்த

வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நினைக்கின்ற மனதால் அனுபவிக்கின்ற
மனதை நெறிப்படும்படி வகுத்த அருட்பெருஞ்ஜோதி.

268. புகலரும் அகண்ட பூரண நடுவால்
அகநடு வகுத்த அருட்பெருஞ்ஜோதி.

புகலரும்	விளக்கிச் சொல்லவொண்ணு
அகண்ட	விரிந்த
பூரண	நிறைவுபெற்ற
நடுவால்	மனத்தைப்பெற
அக	அறிவு
நடு	மனத்தை
வகுத்துதந்த	அருட்பெருஞ்ஜோதி

இவ்வளவு என்று வரையறுத்துச் சொல்ல முடியாத வள்ளலார் திருவுள்ளம் போன்ற மனதால் அறிகின்ற மனதை உருவாக்க முடியும். வள்ளலார் போன்ற மாமனிதர் துணையின்றி மனிதன் மாமனித நிலையை அடைய முடியாது. சொல்லவொண்ணு நிறைவு எய்தி உள்ளத்தால் அறிகின்ற மனத்தை உருவாக்கிய அருட்பெருஞ்ஜோதி ''எல்லாம் இல்லை சொல்லறியார்க்கே''

மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்பன சூட்சும உடம்பின் நான்கு அலுவலகங்கள். (MIND-INTELLECT-INTELIGENCE EGO.,) இவற்றை அறிவு, நிறை, ஓர்ப்பு கடைப்பிடி என்ற நான்கு ஆண்மை இயல்போடு ஒப்பிட்டு சொல்வது உண்டு. நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன பெண் இயலாகும்.

Koviloor Digital Library

காயெல்லாம் கனியென என்ற பாடலில்

சாற்றிட —சொல்ல — உடம்பு —புறப்புறம்—
—அனுபவம்
நினைத்திட —எண்ணுதல் — மனம்— புறம்—நினைவு
மதித்திட—உணர்தல் —உயிர்—அகப்புறம்— உணர்வு
அறிந்திட — அறிதல் — இறை — அகம் - அறிவு
வாயெல்லாம் தித்திக்கும் — உடம்பு
மனமெல்லாம் தித்திக்கும் — மனம்
மதியெல்லாம் தித்திக்கும் — உயிர்
மன்னிய மெய்யறிவெலாம் தித்திக்கும் இறை.

தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டை தினந் தோறும் நான் படிக்கும் போது என்னை நான் அறியேன் நா ஒன்றோ? ஊன் படிக்கும், உளம் படிக்கும், உயிர்படிக்கும் உயிருக்குயிரும் தான் படிக்கும் அனுபவம் காண் தனிக் கருணை பெருந்தகையே என்று வள்ளலார் ஆளுடைய தம்பிகள் அருள்மாலையில் பாடியிருப்பதை ஊன்றிப்படிக்க வேண்டும்.

269 புறப்புறக்கடை முதல் புணர்ப்பால் புறப்புற
அறக் கணம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி

புறப்புற	அனுபவிக்கின்ற
கடை	உடம்பை
முதல்	உயிர்
புணர்ப்பால்	சேருவதால்
புறப்புற	அனுபவிக்கிற
அறக்கனம்	அறத்தைப்பேணும் சான்றோர் இனத்தை

வகுத்த அருட்பெருஞ்ஜோதி.

உடலாகிய சூரியன், மனமாகிய சந்திரன், உயிராகிய நெருப்பு இந்த மூன்றும், தனித் தனிப் பொருள் அல்ல. ஒன்றே. நெருப்பே சூரியனுக விளங்குகிறது. அதிலுள்ள

Koviloor Digital Library

வெப்பத்தை நீக்கிவிட்டு வெளிச்சம் மாத்திரம் இருப்பதால் குளிர்ச்சியோடு இருப்பது சந்திரன். நம்முடைய கோபம் முதலிய கொடிய குணங்களாகிய வெப்பம் நீங்கினால் அற நெறிதோன்றும், நம் வலது மூச்சு சூரியமூச்சு, சந்திர மூச்சு இடது மூச்சு ஆகிறது இருகலையும் சேர்ந்து இயங்கும் பொழுது நெருப்பு (அக்னி) மூச்சு ஆகிறது. இவை மூன்றும் முறையேபரிவு நரம்பு மண்டலம் பரிவு எதிர்நரம்பு மண்டலம் மத்திய நரம்பு மண்டலம் ஆகிய மூன்று பகுதிகளால் இயங்குகிறது.

LOGIC — அளவை நூல் காரணம்.

அனுபவிக்கிற உடம்பு உயிரோடு சேருகிறது. அப்பொழுது அறவோர் (SAVENTS) கூட்டம் உருவாகிறது. அதாவது இறை அனுபவத்தில் உடம்பு தோய்கிறபொழுது உயிர் இன்னுயிராக மாறுகிறது. இன்னுயிர் கூட்டத்தினரே அறவோர் எனப்படுவர்.

270. புறத்தியல் கடை முதல் புணர்ப்பால் புறத்துறும்
அறக் கணம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி

புறத்தியங்கும் — சிந்திக்கின்ற தன்மையுடைய
கடை — (உடம்பு) உடம்பை
முதல் — (உயிர்)
புணர்ப்பால் — சேருவதால்
புறத்துறும் — நினைவு பொருந்தும்படி
அறக்கணம் — வாழ்கின்ற அறவோரை
வகுத்த அருட்பெருஞ்ஜோதி

நினைவிலே இயங்குகின்ற உடம்பும் உயிரும் சேருகின்றன. அதனால் நினைவை வளர்க்கின்ற அறிஞர் (SAGES) கூட்டம் உருவாகின்றது. இறை நினைவிலே உடம்பு நனையும்பொழுது இன்னுயிராக மாறுகிறது. இவர்களே அறிஞர் கூட்டம் எனப்படுவர்.

Koviloor Digital Library

புறத்தியல் — இயற்கையான நினைவாற்றல்
புறத்தியல் கடைமுதல் — நினைவின் தன்மையை உடைய உடம்பும் மனமும் சேருகின்றன.

அப்பொழுது நினைவை நெறிப்படுத்துகிற அறவோர் கூட்டம் உருவாகிறது. இது மாமனிதர்களால் தான் முடியும்.

CNS — CENTRAL NERVOUS SYSTEM
அக்கினி — INCLUDES BRAIN AND SPINAL CARD WITH 43 BRANCHES OF NERVES.

சூரியன்
ANS — AUTONOMOUS NERVOUS SYSTEM WITH TWO BRANCHES SYMPATHETIC (பரிவுநரம்பு மண்டலம்)

சந்திரன் — பரிவு எதிர் நரம்பு மண்டலம் PARA SYMPATHETIC
BNS — BALANCING NERVOUS SYSTEM
தலை — நடு — கடை
உடம்பின் தலைபாகம் — மனம் — கால்
நடுதல்

ARTERIES — நாடி இதயத்திலிருந்து தூயரத்தம் சேரும் வழி.
VEINS — நாளம் — இதயத்தை நோக்கிசெல்லும் ரத்தம்
AFFRONT NERVE — AFFECT
EFFRONT NERVE

புலன்கள் RECEPTORS — ஐம்புலன்
பொறி EFFECTONS — ஐம்பொறி
(இயந்திரம்)

Koviloor Digital Library

271. அகப்புறக்கடை முதல் அணைவாய் அக்கணம் அகத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

அகப்புற	உணர்கின்ற
கடை	உடம்பும்
முதல்	உயிரோடும்
அணைவால்	சேர்வதால்
அக்கணம் (அகப்புறக்கணம்)	உணர்வுள்ள சான்றோர் கூட்டம்
அகத்துற	அறிவுபொருந்த உருவாக மனதிலே

வகுத்த அருட்பெருஞ்ஜோதி.

உணர்வை உடைய உடம்பும், உயிரும் சேருகின்றன. அந்தணர்கூட்டம் (SAINTS) உள்ளே இருக்கிற) அவர்கள் உணர்வைநெறிப்படுத்தி விளைவுகளையும்தருகின்றனர். இறை உணர்வை முழுமையாக உடைய உடம்பும் உயிரும் சேர்ந்து இன்னுயிரின் மூன்றாம் நிலைக்கு ஏறும்பொழுது அந்தணர் (Saints) கூட்டம் உருவாகிறது.

SAGES — அறவோர்
SAWENTS — அறிவர்
SAINTS — அந்தணர்
SEERS — மெய்கண்டோர்
விஞ — வில் & நா

விரும்பியதை எய்துவென்று விளக்கம் தருதல் — விளங்கச் செய்தல். விஞத்தெரியாதவன்?

Koviloor Digital Library

''கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோற்கப்படாத செவி'' — குறள்

272. அகக்கடை முதல் புணர்ப்பதனால் அக்கணம்
அகத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி

அகக்கடைமுதல் — அறிகின்ற உடம்பும் உயிரும் சேருகின்றன.

அக்கணம் — அறிவுடைய எதையும் காண்கின்ற மெய்கண்டார்.

அகத்திடை — உடம்பிற்குள்ளே வகுத்த அருட்பெருஞ்ஜோதி

இறை அறிவால் அறிகின்ற உடம்பும், உயிரும் சேருவதால் இன்னுயிரின் நான்காவது நிலையாகிய அறிவர் என்கின்ற மெய்கண்டார் இனம் உள்ளும், புறமும் ஒத்து இயங்குப்படி வகுத்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே.

—❋—

Koviloor Digital Library

நூலகம், கோவிலூர்
A. No.........
R65(வள்)

அருளொளி வேதியல்
(GRACE CHEMISTRY)

725. தோலெலாங் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
மேலெளாங் கட்டவை விட்டுவிட்டியங்கிட
மனம் கனிவதால் தோல் குழைகிறது
சூழ் நரம்பனைத்தும் நெகிழ்ந்து
உடம்பெல்லாம் நெகிழ்ந்து அசேதனப்பொருளாகிய இந்த
உடம்பே உணரவும் நினைக்கவும் அறியவும் தொடங்கி சேதனப்
பொருளாக மாறிவிடுகிறது.
தோலெலாம் குழைந்திட

குழைவு இங்கு ஆக்கம் தருகிற அன்பின் குழைவு. நெகிழ்தல் என்றொரு பொருள்.

புறநடு ஒரு கடை புணர்ப்பித்து என்ற அகவல் வரியிலும் இந்த உண்மை விளக்கப்படுகிறது.

726. என்பெலாம் நெக்கு நெக்கு இயலிடை நெகிழ்ந்திட
மென்புடைத்தசை எலாம் மெய்யுறத் தளர்ந்திட

எலும்புகள் ஜீவகாருண்யத்தால் மனம் உருகி துண்டு துண்டாக நெகிழ்ந்து, மீண்டும் இயங்குவதற்கென்றே ஒன்று சேருகின்றன. அதன் உள்ளே உள்ள மச்சையும் நெகிழ்வதால் இருள் நீங்குகிறது. அதன் விளைவே ஒளி வண்ணமாகி உண்மை விளங்குவது (மெய்யுற) ஆகிறது.

Koviloor Digital Library

BLOOD IS GENERATED ONLY FROM THE MARROW OF THE BONES.

மச்சு ஐ மச்சை

727. ''இரத்தம் அனைத்தும் உள் இறுகிடச் சுக்கிலம் உரத்திடை பந்தித்து ஒரு திரளாயிட'' தோல் நரம்பு தசை எலும்பு எல்லாம் நெகிழும் போது ரத்தம் உறுதி யாக இறுகி விடுகிறது. அவ்வாறு இறுகும்போது, நாதமும், விந்தும், நெஞ்சில் ஒன்று பட்டு திரண்டு நிற்கிறது.

728. ''மடல் எலாம் மூளை மலர்ந்திட அமுதம்
உடல் எலாம் ஊற்றெடுத்து ஓடி நிரம்பிட''

தோல், நரம்பு, எலும்பு, தசை எல்லாம் நெகிழ்ந்து ரத்தம் சுக்கிலமாக மாறுவதால் மனம் நெகிழ்கிறது, மூளை மலர் கிறது, அமுதம் ஊருகிறது. தூல உடம்புத்தாதுக்கள் நெகிழ் வதால் அவை அழியாமல் இருக்கின்றன.

729. ஒண் நுதல் வியர்த்திட ஒளிமுகம் மலர்ந்திட
தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட

நெற்றியில் வியர்வை அரும்புகிறது. உயிர் ஒளி வீசு கிறது. முகம் மலருகிறது—மூச்சு குளிர்ச்சி அடைகிறது.

நாம் சில பேரை பார்த்தால் அவர்கள் முகத்தில் ஒரு தேஜஸ்—ஒளி இருப்பதை அறிய முடிகிறது. அவர்களுடன் பேசுவதில் ஒரு ஆர்வம் நமக்கு ஏற்படுகிறது.

730. உள் நகை தோற்றிட உரோமம் பொடித்திட
கண்ணினில் நீர் பெருபெருகி கால் வழிந்து ஓடிட

இன்பம் கலந்த உவகை அதாவது வியப்புநகை தோன் றிட மயிர்க் கால்கள் புளகாங்கிதம் அடைந்திட இன்பம்

Koviloor Digital Library

பெருகிட ஆனந்தக் கண்ணீர் கடைக்கண் வழியே பெருகி உதிர்ந்திடும்.

731. வாய் துடித்து அலறிட வளர் செவித் துணைகளில்
கயிசைப் பொறி எலாம் கும்மெனக் கொட்டிட

நம்மை அறியாமலே பரநாத ஒலி உள்ளே எழுகிறது. அதற்கு உரிய பொருளைத் தெரிந்து கொண்டு அந்தப் பொருளோடு உரையாடுவதற்கு நம்வாய் துடிக்கிறது. அத்துடிப்பால் எழுகிற ஒலிக்கு ஏற்ற எதிரொலியாக உள்ளே நுட்பமான அருள்ஒலி ஒலிக்கிறது. பரநாதமும், பரவிந்தும் எழுகிற பொழுது, அவற்றை ஏற்று வாழ்விப்பது அருள் ஒலியும். அருள்ஒளியும் ஆகும். இதை அனுபவத்தில் கண்டு மகிழலாம்.

732. மெய்எலாம் குளிர்ந்திட மென்மார்பு அசைந்திட
கைஎலாம் குவிந்திடக்கால்எலாம் சுலவிட.

மத்திய நரம்பு மண்டலம் செயல்பட இயலாதநிலை வரும்பொழுது தானியங்கி நரம்பு மண்டலம் செயல்படுகிறது. அதைச்செயல் படுத்துவதற்கு உடம்பும், மனமும் தேவையில்லை. இவற்றை செயல்படுத்தவும், உயர்த்தவும் தோன்றுவது தான் துரியம் என்கிற நாலாவது அனுபவம்.

மென்மார்பு அசைந்திட என்பது எதைக் குறிக்கிறது?

1) ஆண் – பெண் கூட்டுறவில் கணநேர இன்பத்தை (ORGASM) உண்டாக்குகிற பொழுது உடம்பில் எல்லாப் பகுதிகளும், 72,000 நாடி நரம்புகளும், மார்பையும், கீழ் மூலாதாரத்தையும் சூழ்ந்து நின்று மறைந்துவிடும். இது. மறையாமல் இருந்து நீள்வதற்கு உரிய ஆற்றலை அதிர்வு எண்ணின் விரைவாலும், குறைவாலும் படிப்படியாக உயர்த்துவதை இது குறிக்கிறது.

Koviloor Digital Library

2) இந்த அதிர்வு எண் உயர்வாலும், மென்மையாலும், மூளையின் இரு பகுதிகளும் (வலம்–இடம்) கூடும் இடத்தில் உள்ள பினியல் என்கிற ஒளிஇயக்கும் சுரபி (ஒளிநி) பெண் சுரபி பிட்டுடரி என்கிற ஒலி இயக்கும் சுரபி (ஒளிநி) என்ற ஆண் சுரபி யோடு கூடி இன்பத்தைத் தொடரச் செய்கிறது. இதற்குத்தான் சமாதி (Trams) என்றுபெயர். அருள் விளக்க மாலை 47–வது பாட்டில் இதன் விளக்கத்தை காணலாம். ஒரு மடந்தை வலிந்தணைந்து–எனத்தொடங்கும் பாடல்அது.

733. மனம் கனிந்து உருகிட மதி நிறைந்து ஒளிர்ந்திட
இனம் பெறுசித்தம் இயைந்து களித்திட

குலம் தீது கொள்கை அழிந்தக்கடை
குலம் என்றால் கொள்கை உடைய கூட்டத்தினர்
சித்தம் இனத்தால் உருவாகிறது. மனக்கனிவால் மதி
இயற்கை அறிவு
ஒளிவீசுகிறது.

மனமானதுஜீவகாருண்ய ஒழுக்கத்தால் உருகிப்பெருகும் போது, மதி என்கிற இயற்கை அறிவு ஒளிவீசி ஒளிர்கிறது. அப்பொழுது அதற்கு முன் பல பிறவிகளிலும் நெருங்கிப் பழகிய மாமனிதரும் மெய்கண்டோரும் வழங்கி இருக்கும் உண்மை கைகொடுக்கிறது. அதன் விளைவாக சரியான முடிவை எடுக்கத்துணை புரிகிறது. நம் உள்ளத்தோடு பொருந்தி நின்று தூய இன்பத்தை வழங்குகிறது.

734. அகங்காரம் ஆங்காங்கு அதிகரிப்பு அமைந்திட
சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட

மும்மலமாகிய கன்மம்(உடம்பு)மாயை (மனம்) ஆணவம் (உயிர்) என்ற மூன்றையும் தூய்மை செய்யவேண்டுமே ஒழிய அழித்துவிட வேண்டும் என்று சொல்வது தவறு. இம்மூன்றும் முறையே சுத்த பிரணவ ஞான தேகங்கள் ஆகின்றன. முத்திறல் வடிவம்தோன்றுகிறது. அகங்காரம் என்பதுஇடத்திற்கு

Koviloor Digital Library

ஏற்றபடி பொருந்தி நின்று காரிய சித்தியைத் தருகிறது. மனத் தூய்மையையும் தருகிறது. வரம்பு கடந்தால் அழிவைத் தரும். ஆணவத்தை நெறிப்படுத்தினுல், முத்திறல் வடிவம் தோன்றி நாம் அடைகிற இன்பத்தை உலகத்தினரும், அறிந்து கொண்டு நம் பக்கம் திரும்பி மகிழ்கின்றன.

735. அறி உரு அனைத்தும் ஆனந்த மாயிடப்
பொறியுறும் ஆன்ம தற்போதமும் போயிட

உலக இன்பம் அந்தந்த பொருளால் அடைகிற சிறுபயனை குறிக்கும். இது நீடித்து இருக்காது. ORGASM நீடிக்கச் செய்வது தான் தியானம். அனந்தம் - ஆனந்தம். முடிவற்ற இன்பம் TRANS – BLISS. கண்ணைத்தவிர மற்ற நான்கு பொறிகளால் அனுபவிப்பதை அருவ அனுபவம் என்று சொல்வர். கண்ணுல் காண்பது மட்டும் உருவ அனுபவம். உலக அனுபவம் (உருவம்) நினைவு — உருஅருவம் — உணர்வு அருஉருவம் (அறிவு—அருவம்) அறிவின் வடிவங் களெல்லாம் இன்ப வண்ணமாக மாறுகின்றன. இந்த உடம்பையும், உள்ளத்தையும் இயக்குகின்ற ஆண்மை என்கிற கடைப்பிடி (ஆணவம்) வரம்பு கடந்து விடாமல் அடங்கி நிற்கிறது. இது இந்த உடம்பாகிய பொறியினை (இயந்திரத்தை) செம்மையாக இயக்குகிறது.

736. தத்துவம் அனைத்தும் தாம் ஒருங்கு ஒழிந்திட
சத்துவம் ஒன்றே தனித்து நின்று ஓங்கிட

தத்துவம் — உடற்கூறு
சத்துவம் — ஒளிக்குணம்
தாமஸம் — இருள்குணம்
ராஜஸம் — செயல்குணம் (இருள் & ஒளி)

Koviloor Digital Library

தத்துவம் என்ற சொல்லுக்கு வெறும் உடற்கூறு எனப் பொருள்கொள்ளக் கூடாது. 'அது நீ' என்றும் பொருள் பண்ணி தடுமாறக்கூடாது. அதை ஒழுங்குப்படுத்தி ஒளி பெறச்செய்யவேண்டும். தாமஸ குணமாகிய இருள்குணத் திலும், ராஜஸ குணமாகிய செயல் குணத்திலும் தடுமாறிக் கொண்டு இருக்கவும் கூடாது. தத்து உவம் - தத்துவம். செயலுக்கும் இருளுக்கும் இடையில் தத்திக்கொண்டு தடு மாறிக் கொண்டு இருப்பது. இந்த நிலையிலிருந்து வெளிச்சத்தை அடைவதுதான் சத்துவம். அதாவது ஒளி உடம்பு அடைதல்.

737, உலகு எலாம் விடயம் உள எலாம் மறைந்திட
அலகு இலா அருளின் ஆசைமேல் பொங்கிட

உலகத்தில் உள்ள எல்லாப்பொருள்களும் அவற்றின் இயக்கங்களும், ஒருங்கே மறைந்திட அதாவது அவை அனைத்தும் நிலையற்றவை என்பதை உணர்ந்து கொண்ட வுடன் அவை தானே விலகி விடுகின்றன. அதனால் எல்லையற்ற அருளின் பேராற்றல் மீது விருப்பம் வளருகிறது

738. என் உளத்து எழுந்து உயிர் எல்லாம் மலர்ந்திட

என் உளத்து ஓங்கிய என் தனி அன்பே, என் உள்ளேயே தோன்றி என் உடல் மனம் உயிர் என்ற மூன்றும் முழுமையாக மலரும்படி செய்கிறது அருள். இதனுல், என் உள்ளத்தில் தோன்றி உயிர்களிடத்து விரிவடைகின்ற ஒப்பற்றே அன்பே ஆண்டவனே.

739. பொன் அடி கண்டு அருள் புத்தமுது உணவே
என் உளத்து எழுந்த என்னுடைய அன்பே

Koviloor Digital Library

இந்த அறிவும் அனுபவமும் ஆகிய இறைவன் இரு திருவடிகள்-என்னைத் தங்கச் செய்யும்–அதாவது நிலை பெறச் செய்யும் ஆற்றல் உடையவை. இவற்றைக் கண்டதும், உடம்பிலும் உள்ளத்திலும் அமுதம் ஊறுகிறது. அதனை உண்டு நான் நிலை பெற்று மரணமில்லாப் பெரு வாழ்வில் வாழும்படி செய்கிற தனித்தன்மை உடைய என்னுடைய அன்பே ஆண்டவரே.

740. தன்னையே எனக்குத் தந்து அருள் ஒளியால், என்னை வேதித்த என் தனி அன்பே. இறைவன் தன்னையும் தன் அருள் ஆற்றலையும் முழுமையாக வள்ளலாருக்கு அருளியிருக்கிறார். அதனால் அருள்வேதிப்பால் வள்ளலாரை எந்த வகையிலும் அழிவில்லாத இறை நிலைக்கு உயர்த்தியிருக்கிறார். அத்தகைய பெருநிலைக்கு என்னை உயர்த்திய என் ஒப்பற்ற அன்பு வடிவமான ஆண்டவரே.

"தந்து அருள் ஒளியாய்" என்பது இறைவன் தன்னை உயிருக்கு வழங்குகிற வண்மையே அருளாகவும், அருள் ஒளியாகவும், வளர்ந்து பெருவாழ்வை அருளுகிறது.

—❋—

Koviloor Digital Library

நடராஜ பதி மாலை

காயெலாங் கனியெனக் கனி விக்கு மொரு பெருங்
கருணையமுதே யெனக்கு
கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்
காட்சியே கனக மலையே
தாயெலா மனையவென் றந்தையே யொருதனித்
தலைவனே நின் பெருமையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
சார்கின்ற தோறு மந்தோ
வாயெலாந் தித்திக்கும் மனமெலாந் தித்திக்கும்
மதியெலாம் தித்திக்கும் என்
மன்னியமெய் அறிவெலாந்தித்திக்கும் என்னிய
அதில் வருமின்பம் என் புகலுவேன்
தூயெலாம் பெற்றநிலை மேலருட் சுகமெலாம்
தோன்றிட விளங்கு சுடரே
துரிய வெளி நடுகின்ற பெரிய பொருளேயருட்
ஜோதி நட ராஜ குருவே.

வள்ளல் பெருமான் அருளிய நடராஜபதிமாலை 34 பாடல்களை உடையது. அதில் 31 வது பாடல் ''காயெலாங் கனியெனத்'' தொடங்குகிறது. இந்த பாடலிலிருந்து அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்ற நான்கு இடங்கள் எவை, அங்கே கடவுள் பிரகாசம் எப்படித்தோன்றுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இப்பாடலில்

''சாற்றிட நினைத்திட மதித்திட
அறிந்திட சார்கின்ற
தோறும் அந்தோ வாயெலாம்
தித்திக்கும், மனமெலாம்
தித்திக்கும், மதியெலாம்
தித்திக்கும், மன்னிய மெய்
அறிவெலாம் தித்திக்கும்''

என்று வருகிறது-இங்கே மன்னியமெய் அறிவு என்பது அகம், இறை அனுபவப்பயன். மதியாகிய அகப்புறம் என்பது

Koviloor Digital Library

உணர்வு. இது அருள் அனுபவத்தன்மையைக் குறிக்கிறது. புறம் என்பது மனம்.இதில் இனங்கண்டு கொள்ளும் நினைவு நிலை உருவாகிறது இது உயிர் அனுபவம் நாலாவது புறப் புறம். இது உலக அனுபவத்தைக் குறிக்கிறது. எல்லோரும் அறிந்திருக்கும் அனுபவத்திற்கு உடம்பும் மனமும் தேவை. இவ்விரண்டையும் சேர்த்து புறம் என்றும் புறப்புறம் என்றும் பெருமான் குறிப்பிடுகிறார். இதில் நமக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது மதி என்பது என்னவென்று புரிந்து கொள்ள வேண்டும். இயற்கை அறிவையே மதி என்கிறோம். அது உயிர் உணர்வால் நாம்பல பிறவிகளில் அனுபவப்பதிவுகளின் தொகுதியாகும். இதற்கு எதிரானது செயற்கை அறிவாகிய விதியைக் குறிக்கிறது. இது நூலறிவைக் குறிக்கும். நூலறிவோடு நுண்ணறிவும் சேர்ந்தாலன்றி முழு அனுபவம் கிடைக்காது. அரிய செயலாகிய பெருவாழ்வு முதலியவற்றை நுட்பம் பெற்று நினைத்து வாழ முடியாது. இதைத்தான்.

'' மதி நுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்.
யாவுள முன்னிற்பவை'' என்கிறது திருக்குறள்

உயிரில் நான்கு வகை உண்டு. அவற்றுள் காருயிராகிய பசு புறப்புறமாகிய உலக அனுபவத்தை குறிக்கிறது. இது வளர்ந்து உயிர் அனுபவமாகிய நினைவு காண ஒழுக்கத்தையும் ஜீவஒழுக்கத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. மன்னுயிராகிய அருள் அனுபவம் அகப்புறமாகிய மதி நிலையைக் குறிக்கிறது. இந்த மன்னுயிரையும், கடந்து நூற்றுக்கு நூறு தன்னலம் கடந்த இன்னுயிரைக் குறிக்கிறது. இதுவே மன்னிய மெய்யறிவாகிய கடவுள் அனுபவம் ஆகிறது. இதனையே, 'தேன் படிக்கும் அமுதாம் என்று தொடங்கும் திரு. அருட்பா பாடல் இன்னும் தெளிவாக விளக்கியிருக்கிறது.

இப்பாடலை பொருள் உணர்ந்து படித்தால் உண்மை வெளிப்படும். தெரியவரும். உணர முடியும்.

Koviloor Digital Library

''கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்''

என்ற வழக்கு தொடருக்கு ''இறைவனைக் கண்டவர் ஒன்றும் அது பற்றி சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை உணரவே முடிகிறது. அதுபோல் இறை பற்றி சொல்பவர் உண்மையாகவே இறைவனைக் கண்டதில்லை. எல்லாம் கற்பனையே'' என்று பலரும் பொருள் சொல்கிறார்கள். சொல்லியும், எழுதியும் வந்து இருக்கிருர்கள். பொருள் மேலே எழுதியபடி அல்ல. உண்மை பொருள் வேறு அதாவது இறைவனைக் கண்டவர்கள் மெய்யை உணர்ந்தவர்கள் விண்டிலர். அதாவது விண்டு போகவில்லை விழுந்து விடவில்லை. இந்த உடம்பை அழியா உடம்பாக்கிக் கொண்டு மரணமில்லாப் பெருவாழ்வைப் பெற்று வள்ளலார் போன்ற ஞானிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இறைவனைக் காணாதவாகள் — கண்டிலர்கள்.

விண்டவர் ஆகிறார்கள். அதாவது மரணநோய்க்கு ஆளாகி அழிந்து போகிறார்கள்.

அருட் பெருஞ் ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

—*—

கோவிலூர் ஆண்டவர்
A. No. 11378
R65 (வள்)
நூலகம், கோவிலூர்